Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 ஐப்பசி 27 (12-11-1992) வியாழக்கிழமை ஓசை 268

## பட்டதாரிகளை பதிவு செய்ய விண்ணப்ப படிவம் இல்லை

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை உடன் அனுப்பிவைக்கும்படி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சைக் கோரி யாழ். செயலகம் அவசர வானொலிச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்ட இச் செய்தி தற்சமயம் கொழும்பிற்குச் சென்றிருக்கும் யாழ். அரச அதிபரின் ஊடாகவே அனுப்பபட்டுள்ளது. அவர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என தெரியவருகிறது. தற்சமயம் வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் தங்களைப் பதிவுசெய்து கொள்ளும் பட்சத்திலேயே அவர்களுக்கு வேலைவாய்ப்பை உடன் பெற (4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் நாட்டிலிருந்து அகதிகளை அனுப்ப இந்தியாவிற்கு உதவ வேண்டாம்

## ஐ. நாவிடம் ஏசியா வாச் கோரிக்கை

(வாஷிங்டன்)

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதற்கு இந்தியாவிற்கு உதவி செய்ய வேண்டாம் என அமெரிக்க மனித உரிமைகள் பாதுகாப்புக் குழுவான ஏசியா வாச் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தைக் கேட்டுள்ளது.

மாரி காலம் முடிந்த பின் அகதிகளைத் திருப்பி அனுப்ப முகாம்களில் உள்ள அகதிகளின் பெயர்களை இந்திய அதிகாரிகள் பதிவு செய்து கொள்வதாக ஏசியா வாச் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை 30,000 அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

அகதிகள் முகாம்களுக்குள் போக அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்படும்வரை அகதிகளைத் திருப்பி அனுப்புவது நிறுத்தப்படவேண்டும் என ஏசியா வாச் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத் தலைவரான திருமதி சடாகோ ஒகேதாவுக்கு இது பற்றிக் கடிதம் எழுதியுள்ளது

அகதிகள் முகாமுக்குள் ஐ.நா. ஸ்தானிகராலய அதிகாரிகள் நுழையவும், அகதிகளின் நலன்களைப் பார்வையிடவும் இந்திய அரசு அனுமதி வழங்க மறுத்திருப்பது குறிப்பிடத் தக்கது.

இலங்கையில் முகாம்கள் அகதிகளால் நிரம்பி வழிகின்றன. இது பற்றித் தெரிந்திருந்தால் அகதிகள் திரும்பிப் போக விரும்பியிருக்க மாட்டார்கள் என்று ஏசியா வாச் கூறுகிறது.

அகதிகள் தாமாகவே விரும்பிச் செல்லவேண்டும். அவர்களுக்கும் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் அல்லா விட்டால் அவர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது என்றும் ஏசியா வாச் கேட்டுள்ளது.

## தரம் III அதிபர்கள் கருத்தரங்கு

தரம் மூன்று அதிபர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் 14-11-1992 தொடக்கம் 17-11-1992 வரை தினமும் காலை 8.30 தொடக்கம் முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது. இது வரை பயிற்சி நெறியை மேற்கொள்ளாதவர்களும் தரம் மூன்று அதிபர்களும், அதிபர் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றவர்களும் கலந்து கொள்ளலாம் என யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவிக்கிறார்.

## டிப்புளோமாதெரிவுபரீட்சை கொழும்பில் நடைபெறும்

1992, 93 ஆம் கல்வி ஆண்டிற்கான முழுநேர கல்வியியல் பட்டப்பின்படிப்பு டிப்புளோமாபயிற்சிக்குத் தெரிவு செய்வதற்கான பரீட்சை இம் மாதம் 4 ஆம் திகதி கொழும்பில் மட்டுமே நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகளை பரீட்சார்த்திகள் கொழும்பு மலே வீதி, பரீட்சைத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார். (பா)

## 15,000 ஆசிரியர்கள் அடுத்த வருடம் நியமனம்

(கொழும்பு)

அடுத்த வருட ஆரம்பத்தில் 15,000 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதற்கான

மதிப்புடைய பாடசாலைகளில் அளவுக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருக்கும் அதே வேளை கிராமப்புற பாடசா

## அரசின் அநியாய செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவேண்டும்

### - வண. கலாநிதி இம்மானுவேல்

(பிறாங்போட்)

அரசின் அநியாயமான செயல்களுக்கு எதிராகக் கிறிஸ்தவர் ஆகிய நாம் ஆயுதம் தூக்க முடியாவிட்டாலும் நமது எதிர்ப்பைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளளோம். கொழும்பு அரசு இந்தப் போரைப் பயங்கரவாதத்துக்கு எதிரான போராகக் கருதுகின்றதே ஒழிய தமிழரின் சுயநிர்ணயஉரிமைக்கானபோராட்ட

இவ்வாறு புனித சவேரியார் குருத்துவக்கல் லூரி அதிபரும், ஆசிய பிராந்திய திருச்சபை ஆயர் மன்றத்தின் மறையியல் ஆலோசகருமான வண. கலாநிதி எஸ். ஜே இம்மானுவேல் கடந்த செப்ரெம்பர் 19 ஆம் திகதி பிறாங்போட்டர் ரூண்சாவ் என்ற ஜெர்மானிய பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அந்தச் செவ்

எமக்கு வேண்டிய உதவிகளும் கிடைப்பதில்லை என்றும்,

தமிழர்கள் முப்பது வருடகாலமாக ஒரு சமாதானத் தீர்வை ஜனநாயக முறையில் எட்டுவதறகு எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. முப்பது வருடங்களுக்குப் பிறகு இளைஞர் ஆயுதம் தூக்கியுள்ளார்கள் என்றும்,

நடந்து கொண்டிருக்கும்

## ஆசிரியர் மீது முஸ்லிம் காடையர் தாக்கு

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை பாடசாலை விட்டு தமதுவீட்டிற்கு சென்றுகொண்டிருந்த போது சில முஸ்லிம் காடையர் கும்பலினால் தாக்கப்பட்டு அக்கரைப்பற்று மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

ஆசிரியர் இக் காடையர்களினால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## கடற்படை ரோந்து அதிகரிப்பு

பருத்தித்துறை வல்வெட்டித்துறை கடற்பிராந்தியப் பகுதியில் நேற்று முன்தினம் இரவும் நேற்று பகலும் சிறிலங்கா கடற்படையினரின் விசைப் படகு ரோந்து நடமாட்டம் காணப்பட்டது.

சில தினங்களுக்குப் பின்னர் நேற்று குண்டு வீச்சு விமானங்கள் பலாலிக்குச் சென்று வருவதையும்அவதானிக்கமுடிந்தது.

## மட்டக்களப்பு நகரில் வாகனம் மீது குண்டுவீச்சு; பயணிகள் பலர் காயம்

மட்டக்களப்புநகரில் பொது மக்கள் சென்ற வாகனம் மீது வெடி குண்டு வீசப்பட்டது. இதில் பல பயணிகள் காயம் அடைந்தாக தெரியவருகின்றது.

காயம் அடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாக அச் செய்தி தெரிவிக்கின்றது.

இச் சம்பவம் குறித்து மேலதிக விபரம் ஒன்றும் தெரியவில்லை என ஏ.எவ் பி. தனதுசெய்தியில்தெரிவித்தது.

## மண்டைதீவு படை சூடு ஒரு மீனவர் படுகாயம்

மண்டை தீவு கடற்பரப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மீனவர் மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டினால் ஒருவர் படுகாயமடைந்தார் நேற்று இரவு 8 மணியளவில் குருநகரைச் சேர்ந்த செல்வம் சுரேஸ் (வயது 21) என்னும் மீனவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவராவார்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது; மேற்படி நபரும் மற்றும் இருவரும் குருநகர்கடற் பரப்பிலிருந்து வள்ளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்தவாறே வள்ளத்தை நோக்கி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர். இதன்போது மற்றைய இருவரும் கடலில் குதித்து தப்பிக்கொண்டனர், மேற்படிநபர் வள்ளத்திற்குள்ளிருந்து தலையை நிமிர்த்தியபோது தலையில் சூடு விழுந்துள்ளது. தற்போது இவர் ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார். (சு)

தென்பகுதி சிறைகளில் உள்ளோர்

னம் செய்யப்படுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி.விஜயதுங்க கூறியுள்ளார்.

வேளை கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இந்த இடைவெளி நீக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ணயஉரிமைக்கானபோராட்டமாகக் கருதுவதில்லை.

இலங்கையில் பன்னிரெண்டு இலட்சம் கிறிஸ்தவர்களிடையே தமிழரும், சிங்களவரும் இருப்பதினால் திருச்சபை சமாதானத்துக்கான பங்குப் பணியைச் செய்யலாம். திருச்சபை சில காரியங்களைச் செய்துள்ளது வருங்காலத்தில் சமாதானத்துக்கும், நீதிக்குமாக திருச்சபை தீவிரமாக ஈடுபட வேண்டும்.

அவர் மேலும் அந்தச் செவ்வியில் - அழிவு நிறைந்த இந்தச் சண்டைபற்றி உலக வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் போதிய அக்கறை காட்டுவதில்லை. தமிழர்களாகிய நாம் உலக நாடுகளிலிருந்து தனிமைப்படுத்தப் பட்டுள்ளோம். எங்களுடைய தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன வடக்கில் அரசினால் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்கள் தெற்கில் தெரியாது.

நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் சிறிலங்கா அரசுக்கு உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். உதவும் நாடுகளும் இந்த உள்நாட்டு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முயற்சிக்கும் பணியில் செயலாற்ற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# முறைசாரா கல்வி ஆசிரியர் கொடுப்பனவு வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட முறைசாராக் கல்வி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளையும் மேலதிக கொடுப்பனவுகளையும் உடனடியாக வழங்குமாறுவடக்குக்கிழக்குமாகாண கல்விப் பணிப்பாளர் யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

1990/91ஆம் ஆண்டில் கற்பித்த மேற்படிஆசிரியர்களுக்கு இதுவரை மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது அடுத்தவாரம் முதல் இவ் ஆசிரியர்கள் தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என முறைசாரக் கல்விப பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி)

# க. பொ. த. (சா/த) பரீட்சை அனுமதி அட்டைகள்

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கு தோற்றும் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கு உரிய அனுமதி அட்டைகள் சம்பந்தபபட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# வட-கிழக்கு மாகாணப் பாடசாலைகள் தரமுயரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் சில அடுத்த வருடத்தில் தரமுயர்த்தப் படவுள்ளன. இதனை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அனைத்துக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கட்டடங்கள் அமைக்கக் கூடிய பாடசாலைகளைக் கிடைப்படத்தோடு ஒப்பு நோக்கி பொருத்தமான அபிவிருத்திக்குரிய முன்னுரிமைப் பட்டியலை இருவாரங்களுக்குள் தயாரித்துஅனுப்புமாறும் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கோட்டக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளது.

# தம் உன்னத இலட்சியத்தில் உறுதியாய் நின்றவர்கள்

குண்டு துளைத்து. குருதியில் தேகம் குளித்திடும்வேளையிலும் எம் தமிழீழம் மீட்க வேண்டும் என்ற இதய வேட்கையோடு இமைகளை மூடிய மாவீரர்கள் இவர்கள். எல்லையில் எதிரி நின்றிடும் வேளையில் எனக்கென்றொருவாழ்வா என்று உணர்ந்து கொண்டு எழுந்து நடந்தவர்கள் உரிமை மீட்க உயிரை உருக்கி ஒளிர்பவர்கள். இவ்வாறு மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தேசம் எரிகையில் பாச மழைக்குள் நனைவதா? மக்களினம் தவிக்கையில் எமக்கு மட்டும் வாழ்வா? இந்தக் கேள்விகள் இதயத்தில் எழுந்தன. இமைகள் விரிந்தன. விழிகள் தீயை ஏந்தின. வேங்கைகள் எழுந்தன. வீறுடன் நடந்தன.

சொந்த வாழ்க்கைக் கனவினை கலைத்துவிட்டுத் தாயக விடிவு ஒன்றே தம் உன்னத இலட்சியம் என்பதில் உறுதியாக நின்றவர்கள் எம் மாவீரர்கள். அதனால் தான் புயலும், மழையும், உறைய வைக்கும் பனியும், எரிக்கும் வெயிலும் இவர்களைத் தளர வைக்கவில்லை. இழப்புக்களை எண்ணி அழுவதோடு நின்று விட்டால் அந்நியப் பிடிக்குள் எம் தேசம் அமுக்கப்பட்டு விடும் என்று தெரிந்துகொண்டார்கள் அதனால் வெந்தணலை உள்ளத்துள் ஏந்தி வீறுடன் நடந்தார்கள் விடியலைக் காணுமுன்னே விளக்காகி ஒளிர்ந்தார்கள். தாகம் அடங்காமல் கல்லறைகளில் துயிலும் இவர்களின் கனவு நனவாகும் என்பது உறுதியிலும் உறுதி எனமேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு-கிழக்கில் 796 ஆலயங்கள் சேதம்

கடந்த 1990-ம்ஆண்டு சிறிலங்கா அரசினால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்திய இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, திருக்கோணமலை, மட்டக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வங்கக்கடலில் தாழமுக்கம் மட்டக்களப்பை கடக்கும்

## 100 கி. மீ. வேகத்தில் காற்று வீசும்

(கொழும்பு)

வங்காளவிரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழ் அமுக்கம் மேலும் தீவிரமடைந்து இலங்கைக்கு மேலாக கடக்கக் கூடும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இத்தாழமுக்கம் நேற்று மாலை 5.30 மணியளவில் மட்டக்களப்பிற்கு கிழக்கே 300 கிலோமீற்றர் தூரத்தில் நிலைகொண்டிருந்தது இதனால் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கடுங்காற்றுடன் மழைபெய்யும் எனவும்,

கிழக்கு கடல் கொந்தளிப்பாக இருக்கும் எனவும்இன்று நண்பகல் அளவில் தாழமுக்கம் மட்டக்களப்பை தாண்டிச் செல்லக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தென்பகுதி சிறைகளில் உள்ளோர

# மேலதிக விபரம் சேகரிக்க அரச அதிபர் முயற்சி

(கொழும்பு)

தென்பகுதிச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர் தொடர்பாக மேலதிக தகவல்கள் சேகரிக்கப் பட்டு வருகின்றன.

கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் மேற்படி சிறைச்சாலைகளுக்குச் சென்று திரும்பியுள்ளார். அத்துடன் சிறைச்சாலைகள் திணைக்களத் தலைவரையும் சந்தித்து உரையாடியிருக்கிறார். தென்பகுதிச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரச அதிபர் முயற்சி செய்து வருவதாக கொழும்பில் இருந்து நேற்று மாலை எமக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. அரச அதிபர் யாழ்ப்பாணம் திரும்பும் சமயம் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பான சில தகவல்களைத் தன்னுடன் எடுத்து வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# பயணிகள் கப்பலில் தபால் எடுத்துவர முயற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திற்கான வெளியூர்த் தபால் சேவையை சீரமைபபதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது கொழும்புக்கான கப்பல் போக்குவரத்து சீரற்றிருப்பதால் தபால் பொதிகளை கொழும்புக்கு எடுத்துச் செல்வதில் தற்போது நீண்ட காலம் தாமதம் ஏற்பட்டு வருவது வழக்கம். இவ்வாறு காலதாமதங்களை தவிர்க்கும் முகமாக தபால் பொதிகளை வாராந்தம் கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன

வடபகுதிக்கான பயணிகள் கப்பல் சேவையை நடாத்துவதற்கு அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் முடிவு செய்திருக்கிறது,

இதற்கு கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகமும் அனுமதி வழங்கியிருக்கிறது. பருத்தித்துறைக்கும் கொழும்புக்கும் இடையிலான மேற்படி கடுகதி கப்பல் சேவை சாத்தியப்படும் பட்சத்தில் கொழும்புக்கான தபால் சேவையும் துரிதமாக்கப்படுவதற்கு சந்தர்ப்பம் உருவாகும். இவ்விடயம் குறித்து கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியதாக தெரியவருகிறது.

எனினும் தபால்பொதிகளை பயணிகள் கப்பலில் ஏற்றிச் செல்வதற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என்று நேற்று மாலை கொழும்பில் இருந்து எமக்கு கிடைத்த தகவலகள் தெரிவிக்கின்றன. (க)

காடுயரின் காலமெல்லாம் நீடுழி வாழ்வுண்டு

## யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் - 1993

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01-01-1993 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 27-11-1992 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணையும் கேள்விப்படிவக் கட்டணம் ரூபா. 100/-உம் செலுத்துவதன் பேரில் 26-11-92 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3. 00 மணிவரையும் யாழ்ப்பாண மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் ''............சந்தை/கடை''க்கான கேள்வி என எழுதப்பட்ட கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 27-11-92 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகரசபை நானாவித இறைவரிக்கிளையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். தபாலில் அனுப்பப்படுமாயின் அதனால் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்க மாட்டாது.

கேள்விகள் 27-11-92 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாக இருக்கலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 10-11-1992.

| குத்தகை விபரம் | குத்தகை காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 01 பெரியகடை மரக்கறி சந்தை | 1வருடம் | 5,000-00 | 150,000-00 |
| 02. குருநகர் சந்தை | ,, | 5,000-00 | 175,000-00 |
| 03. செங்குந்தா சந்தை | ,, | 5,000-00 | 275,101-00 |
| 04. நாவாந்துறைச் சந்தை | ,, | 2,500-00 | 75,000-00 |
| 05. பாஸையூர் சந்தை | ,, | 2,500-00 | 40 000-00 |
| 06. கொட்டடி சந்தை | ,, | 2,500-00 | 15,000-00 |
| 07. அரியாலை சந்தை | ,, | 1,000-00 | 15,000-00 |
| 08. கொழும்புத்துறை சந்தை | ,, | 500-00 | 1,000-00 |

**இறைச்சிக்கடைகள்**

**கொட்டடிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடைகள்**

| குத்தகை விபரம் | | குத்தகை காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மாதவாடகை |
|---|---|---|---|---|---|
| கடை இல. | 01 | 1வருடம் | 2500-00 | 5400-00 | 123-75 |
| ,, ,, | 02 | ,, | 2500-00 | 6200-00 | 112-50 |
| ,, ,, | 03 | ,, | 2500-00 | 5800-00 | 112-50 |
| ,, ,, | 04 | ,, | 2500-00 | 5000-00 | 112-50 |
| ,, ,, | 05 | ,, | 2500-00 | 10300-00 | 112-50 |
| ,, ,, | 06 | ,, | 2500.00 | 5250.00 | 112.50 |

## 'கோரம்' இன்றிக் கலையும் பாராளுமன்றத் தெரிவுக்குழு

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்திற்கு தமிழ்க் குழுக்களின் பிரதிபலிப்பு எத்தகையது என்பது தொடர்பாக ஆராய்வதற்கென அக்டோபர் 28 ஆம் திகதி பாராளுமன்ற தெரிவுக்குழு கூடியது நீண்ட நேரக் காத்திருப்புக்குப் பின்னர் அமைச்சர் தயாரத்னாவின் வருகையோடு கூட்டம் கூடுவதற்கு தேவையான கோரம் அதாவது பதின்நான்கு உறுப்பினர் கிடைத்தது ஆனால் வந்த வேகத்திலேயே குறிப்புப் புத்தகத்தில் கையெழுத்திட்ட அமைச்சர் தமக்கு வேறு அவசர வேலைகள் இருப்பதாக கூறிப் புறப்பட்டதும் வந்திருந்த பலரும் அவரைத் தொடர்ந்து வெளிச் சென்றனர்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரசின் கறுப்பு வெள்ளி அனுட்டிப்புக்குப் பின்னர் அக்கட்சியினரோடு தமிழ்க் குழுக்கள் பேச்சு எதையும் வைத்துக் கொள்ள விரும்பவில்லை எனவும் அவர்கள் இப்போது சாதாரணமாக சந்தித்துக் கொள்வது கூடஇல்லை எனவும் கூறப்படுகிறது.

## மலையகத்தின் ஆதரவின்றி ஆட்சி செய்ய முடியாது

மலையக தமிழ் மக்களின் ஆதரவு இன்றி எதிர்காலத்தில் எந்த ஒரு அரசியல் கட்சியுமே நாட்டின் ஆட்சிப் பொறுப்பை அமைத்துக் கொள்ள முடியாது என லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் பொதுச்செயலாளர் எஸ்.இராமநாதன் பத்திரிகைக்கு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது தமிழ் மக்களுக்கு மொழிரீதியாக சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். அரசியல், கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு போன்ற சகலவற்றிலும் தமிழ்மக்களுக்கு உரிமையுண்டு சமூகத்தில் தமிழ்மக்கள் உயர் நிலையை அடைவதனை பொறுக்காத சிலர் அவர்கள் மீது பொறாமையுணர்வு கொண்டு செயற்பட நினைப்பவர்கள் தமிழ் இனத்திற்கே விரோதிகளாக உள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

### கருத்துகூற மறுப்பு

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து கொள்ள இருக்கின்றீர்களா என்று முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி. மெலலிடம் பி. பி. சியின் சார்பில் கேட்கப்பட்ட போது அவர் கருத்து எதையும் தெரிவிக்க மறுத்து விட்டார்.

## பதவி வெற்றிடங்கள் [வன்னி மாவட்டம்]

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தொழில்நுட்பவியலாளர்கள் (Technical Officers)
2. நிர்வாக அலுவலர்கள் (Administrative Officers)
3. எழுதுவினைஞர்கள் (Clerks)
   (தொழில்நுட்ப வேலையுடன் தொடர்புடையவர்கள் விரும்பத்தக்கது)
4. வேலை மேற்பார்வையாளர்கள் (Work Supervisors)

மேற்படி பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அடிப்படை வசதிகளும் வேதனமும் நேர்முக பரீட்சையின்போது தீர்மானிக்கப்படும். முல்லைத்தீவு மணலாறு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களை சேர்ந்தவர்கள்.

**காமதேனு**



## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்குண்டு

கறுப்பு + பிறவுண்சேவல்குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு தொகையாக பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு விசேட கழிவுண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (3220)

### விற்பனைக்கு

Prima+ Bahira Hy-Line Christombu. பிறிமா+ பகிரா+ கைலைன் +கிறிஸ்தப்பு ஆகிய இன பேட்டு குஞ்சுகள் +புறோயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு கொள்ளவும் மல்லிகாபதி சந்தை கிழக்குஒழுங்கை மானிப்பாய் [3221]

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி-5152

### மாணவ வழிகாட்டி

1992 கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் சாதாரண தரம் தேர்விற்குத் தோற்றும் மாணவ சமுதாயத்திற்கான வழிகாட்டி சித்திரம் (ஆண்டு 11) ஆக்கம் 'யசோ' (ஆசிரியர்—சித்திரம் வினா விடை) எங்கும் கிடைக்கும். (3616)

### பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில் கே. கே எஸ். வீதி, கொக்குவில் தினசரி; 4 பி. ப. — 6 பி. ப ஞாயிறு; 10 மு ப. — 2 பி ப. (3216)



## தீப்பெட்டி விநியோகம்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க அ. உ. கிளையில் (ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள) அ. இ. உ. அட்டைகளுக்கு அட்டையொன்றிற்கு ஒரு தீப்பெட்டி ரூபா 1/-க்கு வழங்கப்படும் என சங்கப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## ஒன்றிணைப்பு ஒன்றியம் உருவாக்கப்பட்டது

வலிகாமம் தெற்கு, மேற்கு கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புக்களினதும், கூட்டுறவு சங்கங்களினதும் ஒன்றிணைந்த ஒன்றியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலய மண்டபத்தில் காங்கேசன்துறை கிழக்கு கடற்றொழிற் பரிசோதகர் திரு து.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்சுமார்பத்து கடற்றொழில் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்றிணைப்பு ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் ஒன்றியத்தின் தலைவராக மயோசேப்புவும், செயலாளராக க. செபஸ்ரியாம்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மற்றும் நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-11-12

1985-ம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

★ கே.தெய்வநாயகம் (தம்பிலுவில்அம்பாறை)

1986-ம் ஆண்டு சந்நதி வீதியில் சிறிலங்காப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

வினோத் [கணபதிப்பிள்ளை பரதன் - உரும்பராய் வடக்கு — யாழ்]

1987-ம் ஆண்டு கொக்குவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

ராஜி [ஞானமுத்து கிறிஸ்ரி தனசீலன் - ஆத்திக்குழி. முருங்கன் - மன்னார்]

கனகம் புளியடிச்சந்தியில், இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய-

லெப்.கீதன் (வே.திருக்கேதீஸ்வரன்-மட்டுவில்கிழக்கு சாவகச்சேரி-யாழ்)

சுன்னாகம்-இணுவில்பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 மாணவிகள். 2-பெண்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ,, | ,, | 05 | ,, | 2500-00 | 10300-00 | 112-50 |
| ,, | ,, | 06 | ,, | 2500.00 | 5250.00 | 112.50 |
| ,, | ,, | 07 | ,, | 2500.00 | 5300 00 | 112.50 |
| ,, | ,, | 08 | ,, | 2500.00 | 5650.00 | 112 50 |
| ,, | ,, | 09 | ,, | 2500 0) | 5000 00 | 112.50 |
| ,, | ,, | 10 | ,, | 2500 00 | 5000.00 | 112.50 |
| ,, | ,, | 11 | ,, | 2500.00 | 5050.00 | 112.50 |

குருநகர் சந்தை மாட்டிறைச்சிக்கடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடை | இல. | 01 | 1வருடம் | 2500.00 | 50100.00 | 195.00 |
| ,, | ,, | 02 | ,, | 2500.00 | 20250.00 | 195.00 |
| ,, | ,, | 03 | ,, | 2500.00 | 30250.00 | 195.00 |
| ,, | ,, | 04 | ,, | 2500.00 | 20700.00 | 195.00 |
| ,, | ,, | 05 | ,, | 2500.00 | 51000.00 | 195.00 |
| ,, | ,, | 06 | ,, | 2500 00 | 50100.00 | 195.00 |
| ஆட்டிறைச்சிக் கடை | | 07 | ,, | 2500.00 | 11000.00 | 195.00 |

நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கடை | இல. | 01 | 1 வருடம் | 2500-00 | 7000-00 | 200-00 |
| ,, | ,, | 02 | ,, | 2500-00 | 6000-00 | 200-00 |
| ,, | ,, | 03 | ,, | 2500-00 | 5800-00 | 200-00 |
| ,, | ,, | 04 | ,, | 2500-00 | 5400-00 | 200-00 |
| ,, | ,, | 05 | ,, | 2500-00 | 5150-00 | 200-00 |
| ,, | ,, | 06 | ,, | 2500-00 | 7031-00 | 200-00 |
| ,, | ,, | 07 | ,, | 2500-00 | 5200-00 | 200-00 |
| ஆட்டிறைச்சிக்கடை | இல. | 08 | ,, | 2500-00 | 5000-00 | 200-00 |
| கடை | இல. | 09 | ,, | 2500-00 | 5200-00 | 200-00 |
| கோழிக்கடை | இல. | 10 | ,, | 2500-00 | 5000-00 | 200-00 |

பாஷையூர் மாட்டிறைச்சிக் கடை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கடை | இல. | 01 | ,, | 2500-00 | 40100-00 | 135.00 |
| ,, | ,, | 03 | ,, | 2500 00 | 15000.00 | 135.00 |
| நரிக்குண்டு மா. இ. க. | | | ,, | 2500 00 | 61000.00 | 135.00 |
| அரியாலை மா. இ. க. | | | ,, | 2500 00 | 16350 00 | 135.00 |
| அரியாலை ஆ. இ. க. | | | ,, | 2500.00 | 10500.00 | 135.00 |

செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கடை | இல. | 01 | 1 வருடம் | 2500.00 | 10100.00 | 112.50 |
| ,, | ,, | 02 | ,, | 2500.00 | 6000.00 | 112.50 |
| புங்கன்குளம் ஆட்டிறைச்சிக் கடை | | | ,, | 2500.00 | 25000.00 | 200.00 |
| புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | | | ,, | 2500.00 | 50000.00 | 200.00 |

(சி/5388)

# காமதேனு
## குளிர்பான நிலையம்
யாழ். வீதி, கிளிநொச்சி.

யாழ். மாவட்டத்தை சேர்ந்தவர்கள்
விளம்பர இல. 175,
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிகளுக்கு 30-11-92 க்கு முன்னர் தபால் மூலமோ/நேரடியாகவோ விண்ணப்பிக்கவும்.

குறிப்பு: விண்ணப்பதாரிகள் தாம் தெரிவு செய்யும் பதவிகளை விண்ணப்ப கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

(சி/5394)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

# தேர்தல் வேட்புமனுகோரல்

எமது நிறுவனத்தின் புதிய நிர்வாக சபையைத் தெரிவு செய்யும் முகமாக யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, மருதனாமடம், பண்டத்தரிப்பு ஆகியகோட்டங்களில்பின்வரும் பதவிகளுக்குவேட்புமனுக்கள்கோரப் படுகின்றன. தலைவர், செயலாளர், பொருளாளர். நிர்வாகசபை உறுப்பினர்கள் நால்வர். இந்த ஏழுபதவிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்பும் எமது அங்கத்தவர்கள் தனித்தனி பத்திரங்களில் பதவி, பெயர், முன்மொழிபவர், வழிமொழிபவர் பெயர், ஒப்பம் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கோட்டச் செயலாளரிடம் 22/ 11/ 92க்கு முன் ஒப்படைக்கவும். நன்றி.

பொதுச்செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

(3625)

சுன்னாகம்-இணுவில்பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 மாணவிகள். 2-பெண் உட்பட குழந்தைகள் 8-தமிழர்கள்

1988-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட
நாட்டுப்பற்றாளரான
பொருளியல் ஆசிரியர்-

**நாகேந்திரம் கிருஷ்ணானந்தன்** [கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்]

சரசாலையில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1989-ம் ஆண்டு வட்டமடு, அணைக்கட்டுப்பகுதியில் தேசத்துரோகிகள் சுட்டதில் வீரச்சாவெய்திய-

**குகன் -பாபு** [கா, பாபு - அக்கரைப்பற்று - 08]

1990-ம் ஆண்டு சிறிலங்காப்படையினரின் விமானக் குண்டு வீச்சில் விழுப்புண் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் வீரச்சாவெய்திய

**கதிர்மாஸ்டர்** [முத்துக்குமாருஐங்கரன்சித்தன்கேணி வட்டுக்கோட்டை மேற்கு, யாழ்]

குப்பிளான் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**மீனா** [சுதர்சினி தங்கத்துரை பன்னங்கண்டி, 3 ம் வாய்க்கால், பரந்தன் கிளிநொச்சி]

மாங்குளம் பகுதியில், சிறிலங்காப்படையினருனான சமரில் வீரச்சாவெய்திய

**கமலன்** (இராமசாமிமூர்த்திஇராமனூர், புளியங்குளம்)

மட்டக்களப்பு பெரியகளம், மஞ்சநதொடுவாய், கல்லடிப்பகுதிகளை சிறிலங்காப்படையினர், புளொட் தேசவிரோதிகள் சுற்றிவளைத்தபோது பெரியகளம் பகுதியில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**துடிப்பான்** [மகிழடித்தீவு மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தளவாய் வாசியான தமிழர்

1991 ஆம் ஆண்டு அம்பாறை றொட்டைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

**இந்துராஜா** (மூக்கையா வனராஜா கோமாரி, பொத்துவில், அம்பாறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-5389)

சிந்தனைக்கு

ஆத்திரமும் துவேஷமுமே ஆள்கின்றன
உலகை - நியாயம் என்பதன் பெயரால்
- ஜான் வெஸ்லி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 12-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# சமூகவிரோதிகளுக்கு சிறிலங்கா புகலிடம்

பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் முன் வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை திட்டவட்டமாக நிராகரித்திருக்கும் அமைச்சர் தொண்டமான், இவ் வாறே பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது நட வடிக்கைகளைத் தொடருமானால், இக்குழுவிலிரு ந்து தானும், தனது கட்சியும் வெளியேறுவது பற்றி ஆலோசிக்க வேண்டிவரும் என பாராளு மன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முன சிங்காவிற்கு எழுதிய கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

தெரிவுக்குழுவானது இனப்பிரச்சினைக்குத் தீர் வுத்திட்டத்தைக் கொண்டுவர மாட்டாது என்பது இக்குழு அமைக்கப்பட்ட காலத்திலேயே இப்பகு தியில் பல தடவை எம்மால் சுட்டிக்காட்டப்பட் டிருந்தது. இருப்பினும் பிரேமதாசா அமைச்சரவை யில் அங்கம் வகிக்கும் ஒரு அமைச்சர் இவ்வாறு கூறியிருப்பது ஒருவகையில் முக்கியம் வாய்ந்த தொன்றே. அமைச்சர் தொண்டமானின் கடந்த கால அரசியல் நடவடிக்கை எவ்வாறு இருப்பினும், தற்பொழுது அவர் மங்கள முனசிங்காவிற்கு எழுதி யுள்ள கடிதம் பாராளுமன்றத் தெரிவுக்குழு செல் லும் பாதை தவறானது என்பதைச் சுட்டிக்காட்டி யுள்ளதோடு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண தெரிவுக்குழு உதவப்போவதில்லை என்ப தையும் தெளிவாகக் காட்டியுள்ளது.

மேலும், அமைச்சர் தொண்டமானின் இவ் அறி விப்பானது, கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களை விட சிறிதளவேனும தமிழர் பிரச்சினையில் உண் மைத் தன்மையாகவும் தெளிவாகவும் அவர் உள் ளதைவெளிப்படுத்துவதாகவேஉள்ளது ஏனெனில், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடைமுறை சாத் தியமற்றதும், இனப்பூசலை வளர்க்கக் கூடியது மான தீர்வுத் திட்டத்தை தொண்டமான் நிராக ரித்த வேகத்தில் தமிழ்க் குழுக்கள் எவையும் நிரா கரிக்கவில்லை.

மாறாக இன்று தமிழ்மக்களுக்கு எதிராகப்போரி டும் சிங்கள இராணுவத்துடன் இணைந்து போராட தமிழ் இளைஞர்களைத் தேடுவதிலேயே அக்குழுக் கள் அக்கறை காட்டுகின்றன. சிங்கள இளைஞர்

# ஆண்டு-6 அனுமதிப்பரீட்சை பின்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

1993 ஆம் ஆண்டிற்கான ஆண்டுஆறுஅனுமதிப்பரீட்சை பின் போடப்பட்டுள்ளதென யாழ் பிரதேச கல்விப்பணிப் பாளர் இரா சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்

இப்பரீட்சை பின்வரும் கார ணங்களுக்காகப் பின்போடப் பட்டுள்ளது என்று யாழ். கல் விப்பணிப்பாளரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின் றது.

தேசியப் பாடசாலைகளில் ஆண்டு 6 வெற்றிடங்கள். ஆண்டு5 புலமைப்பரிசில் பரீட் சையில் சித்திபெற்ற மாண வர்களுக்கு முன்னுரிமை கொடுத்து நிரப்பவேண்டியுள் ளது. கடைசியாகநடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை முடி வுகள் எதிர்பார்த்ததிலும் பார்க்க முன்கூட்டியே வெளி வரவுள்ளதாக அறியப்படுகின் றமை.

தெரிவு செய்யப்பட்ட பாட சாலைகளில் அனுமதிப் பரீ ட்சை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதில் உள்ள தாம தம்.

காலநேரத்தில் பரீட்சைக் குத் தோற்றும் மாணவர் எண் ணிக்கையை சம்பந்தப்பட் டோர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க முடியாமை.

# விவசாய விஞ்ஞான ஆரம்ப ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மூன்று விவசாய விஞ்ஞான ஆரம்ப ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டி ருககின்றனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஏற்கனவே அனு ப்பிவைக்கப்பட்டிருக்கின்றது. இக்கடிதங்கள் மிகவிரைவில் உரியவர்களுக்குச் சென்றடை யும் என்று கூறப்படுகிறது. ஒருவருக்கு மட்டும் நியமனக் கடிதம் நேரடியாக வழங்கப் பட்டிருக்கிறது. இவர்கள் மிக விரைவில் யாழ். மாவட் டப் பாடசாலைகளில் தமது கடமைகளைப் பொறுப்பேற் றுக்கொள்வர். (க)

செஞ்சிலுவை ஊர்காவற்றுறைப்பிரிவு

# 6 செயற்குழு உறுப்பினர் பதவி விலகினர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஊர் காவற்றுறைப் பிரிவின் செயற் குழுவிலிருந்து ஆறு உறுப்பின ர்கள் ராஜினாமா செய்துள்ள னர். இச் செயற்குழுவின் தலைவர், செயலாளர், செயற் குழு உறுப்பினர். ஒருவர் தவிர்ந்த ஏனையோரே பதவி களை ராஜினாமாச் செய்துள் ளனர்.

சங்கத்திற்கான உபவிதிகள், யாப்பு, அமைப்பு விதிகள், அகவிதிகள் எதுவும் இல்லாத நிலையில் சங்க தலைவர், செயலாளரின் உதவியுடன் செஞ்சிலுவைச்சங்க இலட்சி யங்களுக்கு முரணாக நடந்து வருகிறார் என்றும் மேலும் இது தொடர்பாக 15 குற்றச் சாட்டுகளையும் இராஜி னாமா செய்யும் செயற்குழு உறுப்பினர் தெரிவித்துள்ள னர். இச் செயலுக்கு தாம் உதவி போக முடியாது என வும் தெரிவித்துள்ளனர்.

# ஆரம்ப கல்வி ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி

(பருத்தித்துறை)

வடமராட்சிகல்விக்கோட்ட பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியைக் கற்பிற்கும் ஆசிரி யர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியும் செயலமர்வும் இரு பிரிவுகளாக நடைபெறவுள் ளன. பருத்தித்துறை, புலோலி, உடுத்துறை, நாகர் கோவில் கொத்தணிப் பாடசாலைகளு க்கான சேவைக்காலப் பயிற்சி யும் செயலமர்வும் பருத்தித் துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் எதிர் வரும் 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறவுள் ளன

கரவெட்டி, நெல்லியடி, உடுப்பிட்டி, வல்வெட்டித் துறைக் கொத்தணிப்பாட சாலைகளுக்கான சேவைக் காலப் பயிற்சியும் செயலமர் வும் எதிர்வரும் 20ஆம், 21 ஆம், 22ஆம் திகதிகளில் வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறுகின்றன. இச்சேவை க்காலப் பயிற்சிகளையும் செய லமர்வுகளையும் வடமராட்சி கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ச. செல்லத் துரை ஆரம்பித்து வைப்பார். (25)

# 50,000 தமிழ் மக்கள் தலைமன்னாரில் திண்டாட்டம்

(தலைமன்னார்)

தலைமன்னார்த்துறை கிழ க்கு பகுதி தமிழ் மக்கள் அனை வரும் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பழைய இடங்களில் சென்று குடியேறிவிட வேண்டு மெனவும் இல்லையேல் அகதி முகாம்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் ரத் துச் செய்யப்படும் என அதிகா ரிகள் அறிவித்துள்ளனர்.

இவ் அறிவித்தலைத் தொட ர்ந்து சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் என்ன செய்வதென்று தெரியாது திண்டாட்டநிலைக் குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

தலைமன்னார்த் துறையில் தொழில்வசதி, வீட்டுவசதிகள் இல்லாதிருப்பதனால் உடனடி யாக சென்று குடியேற முடி யாதுள்ளதாக அகதிகள் அதி காரிகளிடம் முறையிட்டுள்ள னர்.

இதேவேளை அதிகாரிகள் அனைவரும் தலைமன்னார்த் துறை கிராமத்தை நேரடியா கச் சென்று பார்வையிட்ட போது வீடுகளையாவும் உடைக் கப்பட்டு உடனடியாக சென்று குடியேற முடியாத நிலையில் இருப்பதனை அவதானிக்க முடிந்ததாகவும் தெரியவருகி றது.

# முறையான யுத்தமும் இல்லை அரசியல் தீர்வும் இல்லை

--- லலித் அத்துலத்முதலி

(கொழும்பு)

சிறிலங்காவின் தற்போ தைய அரசால் எந்தப் பிரச் சினையையும் தீர்க்க முடியாது என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிராண்பாஸ் சந்தியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்ட அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகை யில் வடக்கு - கிழக்கு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு லட்சத்து இருபத்தையா யிரம் இராணுவத்தினர் தேவை. எனது காலத்தில் 6 ஆயிரம் பேராக இருந்த இராணுவத்தை 30 ஆயிரமாக அதிகரித்தேன். மறைந்த அமைச்சர் ரஞ்சன் விஜே ரத்னா 30 ஆயிரத்திலிருந்த இராணுவத்தை 75 ஆயிரமாக அதிகரித்தார். தற்போது ஜனாதிபதி 75 ஆயிரம் போது மெனக் கூறிவிட்டார். ஒன்றே கால் லட்சம் பேர் கொண்ட ராணுவம் தீர்க்கக்கூடிய பிரச் சினையை 75 ஆயிரத்தால் எப்படி தீர்க்க முடியும்.

உலகத்திலேயே போரிடும் எதிரிக்கு ஆயுதம் பணம் கொடுத்த முதல் நாடு நமது நாடுதான். இங்கு இப்போது முறையாக யுத்தமும் செய்யப் படவில்லை. சரியான அரசி யல் தீர்வும் முன்வைக்கப்பட வில்லை என்றார்.

# அமைச்சர் குழு பலாலி வந்தது

(கொழும்பு)

பலாலி, காங்கேசன்துறை இராணுவ முகாம்களுக்கு சிறி லங்கா மாகாண சபைகள் அமைச்சரும், வெளிவிவகார ராஜாங்க அமைச்சருமான ஜோன் அமரதுங்க தலைமையி லான குழுவினர் வந்து சென் றுள்ளனர்

வட - கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இராணுவத்தினரின் நலன் களைக் கவனிக்கவென சிறி லங்கா ஜனாதிபதியால் நிய மிக்கப்பட்ட இக்குழுவினர் இங்குள்ள இராணுவத்தினரின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# ‘அத்த’ பத்திரிகை ஆசிரியர் விடுதலை

[கொழும்பு]

‘அத்த’ என்ற சிங்கள பத்தி ரிகை ஆசிரியர் லொகு பண்ட வணிக சூரிய, நிரபராதி என விடுதலை செய்யப்பட்டுள் ளார். கடந்த ஏப்பிரல் 8 ஆம் திகதி முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம் பொலவின், ‘அரசு தனது எதிரி களை கரும்பூனைகள் மூலம் அழித்தது’ என்ற செய்தி வெளி யிட்டதற்காக இவர் மீது வழ க்கு தொடரப்பட்டது.

# லெப். பார்த்தீபன் இறுதி அஞ்சலி நிகழ்வு

நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டி ருந்த போது நீரில் மூழ்கி வீரச் சாவைத் தழுவிக் கொண்ட லெப்டினன்ட். பார்த்தீபனு (ஐயாத்துரை, பிரபாகரன் புலோலி வடகிழக்கு உத்திரா வத்தை, பருத்தித்துறை) க்கு பெருந்திரளான மக்கள் அஞ் சலி செலுத்தினர். லெப்டின ன்ட் பார்த்தீபனின் பூதவுடல் புலோலி கிழக்கு மத்திய சன சமூக நிலையமண்டபத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்ட த்தில் தமிழீழ விடுதலைப் புலி கள் வடமராட்சி அரசியல் நிர் வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, தமிழீழ விடு தலைப் புலிகள் மகளிர் முன் னணி பொறுப்பாளர் ஆகி யோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர். லெப்டினன்ட் பார்த்தீபனின் பூதவுடல் ஊர் வலமாக வீதிகளால் கொண்டு வரப்பட்ட போது வீதிகளில் மக்கள் கும்பம் வைத்து மலரஞ் சலி செலுத்தி தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர். இறுதியாக வடமராட்சி மாவீ ரர் துயிலும் இல்லத்தில் தமி ழீழ விடுதலைப் புலிகளின் இறுதி மரியாதைகளுடன் லெப்டினனட் பார்த்தீபனின் பூதவுடல் விதைக்கப்பட்டது. (25)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இன்று முத்தமிழ் விழா

இன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை இரதிலஷ்மி மண் டபத்தில் முத்தமிழ் விழா வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட உள்ளது. இவ்முத்தமிழ் விழாவிற்கு பிர தம விருந்தினராக யாழ். பல் கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி அ. சண் முகதாஸ் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பின ரும் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளருமாகிய திரு. வே. இளங்குமரன் அவர்களும் மல்லிகை இதழாசிரியர் திரு. டொமினிக் ஜீவா அவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

விசேட நிகழ்ச்சிகளாக சிறப் புச் சொற்பொழிவு, கவியரங் கம், பட்டி மண்டபம், நடனம் நாட்டிய நாடகம், நாடகம் என்பன இடம்பெற வுள்ளன. வெற்றியீட்டியோருக்கு பரிசில் களை திருமதி சி.இராமநாதன் அவர்கள் வழங்குவார்

கள் படைகளில் இருந்து ஓடுவதும், விலகுவதும் அதிகரித்துள்ள நிலையில், சிங்கள இராணுவத்திற்கு முட்டுக் கொடுப்பதில் இத் தமிழ்க் குழுக்கள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக சிறிலங்கா இராணுவத்தில் தமிழ்குழுக்களைச்சேர்ந்தவர்களைக் கொண்ட ஓர் விசேட படைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு ஈ. என். டி. எல். எப். குழுவைச் சேர்ந்த காளிதாசன் [காளி] என்பவர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. அதாவது புலிகளுக்கு எதிராக போராடி வெல்ல முடியாத சிங்கள இராணுவம் தமிழ்க் குழுக்களின் துணையை நாடி நிற்கின்றது. இதற்கென சமூக விரோத சக்திகளுககு மன்னிப்பளித்து படையிலும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இதுதற்பொழுது விசேட இராணுவப் பிரிவிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள 'காளி'க்கும் பொருந்தும். கிழக்கு மாகாண எம். பி. சீனிவாசனின் மெய்ப்பாதுகாவலராக இருந்த 'காளி' அவரது பஜ்ரோ ஜீப்பையும் 50,000 ரூபா பணத்தையும் களவாடிச் சென்றதை இதற்கு உதாரணமாக காட்டலாம்.

இதேவேளை, சிங்களப்பேரினவாதத்தின் கைக் கூலியான ரெலோ குழு தமிழர் பிரச்சி னக்குத் தீர்வென தீர்வுத் திட்டம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது. இத்தீர்வுத் திட்டமானது சிங்கள பேரினவாதிகளின் அபிலாசைகளைப்பிரதிபலிப்பதாக, வடக்கு-கிழக்கை நிரந்தரமாகப் பிரிப்பதோடு, கிழக்கின் ஒரு பகுதியை சிங்களவருக்குத் தாரை வார்ப்பதாகவும் உள்ளது.

அதாவது, தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு சிங்களவரை மட்டும் கொண்ட இராணுவத்தினால் தீர்வு காண முடியாது என்பதைப் புரிந்து கொண்டுள்ள பேரினவாதசக்திகள் தமிழ் சமூக விரோதக் கும்பல்களின் உதவியை பல்வேறு வழிகளிலும் பயன்படுத்துவதில் முனைப்பாகவுள்ளது. ஆனால், தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளுமே தீர்மானிக்கக் கூடிய சக்தி மிக்கவர்கள். இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இந்தியாவின் துணையுடன் செயற்பட்டபோதே இச் சமூக விரோதக் கும்பல்கள் தமிழ் மக்களினாலும், புலிகளினாலும் தோற்கடிக்கப்பட்டவர்கள் என்பதையும் சிறிலங்கா மறந்து போனமை கவலைக்குரிய தொன்றே.

## மத விபரம் சேர்க்க தனித்தகுதி கோர முடிவு

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானில் தேசியஅடையாள அட்டைகளில் மதம் பற்றிய விவரத்தினை வெளியிடுவதற்கு தனித்தகுதியொன்றை சேர்ப்பதற்கு பாகிஸ்தானிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தானின் இந்நடவடிக்கைக்கு அங்கு வெளியாகும்பத்திரிகைகள் அனைத்தும் கண்டனம் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளன.

இம்முடிவினால் பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மை சமூகம் நாணத்தக்க வகையில் ஒதுக்கி தனிமைப்படுத்தப் படுவார்கள் என செய்தியேடுகள் எச்சரிக்கை செய்துள்ளன.

இம்முடிவை எதிர்த்து நூற்றுக் கணக்கான கிறிஸ்தவர்கள் பாகிஸ்தான் நாட்டு சிறுபான்மை சமூக இணையமைச்சர் திரு. பீட்டர் ஜோன் சகோத்திராவை தாக்குவதற்கு முயற்சி செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில்

## ஐ. நா. குழு மேற்பார்வையில் இரசாயன ஆயுதம் அழிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் இரகசிய அணு ஆயுத வசதிகள் உள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு 32 உறுப்பினர்களைக் கொண்ட ஐ. நா. மேற்பார்வைக் குழு ஈராக் சென்று பரிசோதனை நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இவ் மேற்பார்வைக் குழு பணிப்பின் பேரில் 500 தொன் விஷவாயுச் சேமிப்புக்களை ஈராக் ஐ. நா. மேற்பார்வைக் குழுவின் கண்காணிப்பின் கீழ் அழிக்கத் தொடங்கியுள்ளது.

எனினும் நாளொன்றுக்கு $3\frac{1}{2}$ தொன் விஷவாயு அழிப்பதன் மூலம் முழுவதும் அழிப்பதற்கு ஈராக்கிற்கு சுமார் 5 மாதம் நீடிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஏற்பாட்டின் கீழ் ஈராக்கின் வசம் இருப்பதாகக் கூறப்படும் அனைத்து இரசாயன ஆயுதங்களும் அடுத்த செப்டம்பர் மாதத்திற்குள் அழிக்கப்பட்டுவிடும் என ஐ. நா. அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அணு ஆயுத பரவல் தடுப்பு

## இருதரப்பு பேச்சுக்களாக இந்தியர் குழு அமெ. பயணம்

(டில்லி)

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் பொருட்டு புதுடில்லியில் இருந்து அதிகாரிகள் குழு ஒன்று வாஷிங்டன் சென்றுள்ளது.

கடந்த பெப்ரவரியில் பி.வி. நரசிம்மராவும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஸும் மேற்கொண்டிருந்த முடிவை யடுத்து தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாகவே இப் பேச்சுவார்த்தை அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜன. 31க்குப்பின் ஜெயலலிதா பதவியிலிருக்க மாட்டார்

சுப்பிரமணியம்சுவாமி நம்பிக்கை

(சென்னை)

ஜனவரி 31ஆம் திகதிக்குப் பின்னர் ஜெயலலிதா பதவியிலிருக்க மாட்டார் என்று நான் நிஜமாக நம்புகின்றேன். இவ்வாறு மதுரையில் ஆரம்பித்த தமிழக நல்லாட்சி இயக்கத்தின் பொதுக்கூட்டம் சேலத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு பேசிய அவ்இயக்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் வேலூர், கோவை, திருச்சி என்று பல்வேறு நகரங்களிலும் ஜெயலலிதா அரசுக்கு எதிரான பிரசாரப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படும் என்றும் இறுதியாக சென்னை மெரினாக் கடற்கரையில் நடக்கும் பொதுக்கூட்டத்திற்குப் பின்னர் அங்கு திரளும் பல்லாயிரக்கணக்கான மக்களோடு ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்திற்குப் போய் முற்றுகையிடுவோம். அங்கிருக்கும் ஜெயலலிதாவின் பணப்புதையலை கைப்பற்றுவோம். பொதுவான ஊழல்கள் மற்றும் தனிப்பட்ட ஊழல்கள் மூலம் ஜெயலலிதா சேர்த்துக் கொண்டிருக்கும் கோடிக் கணக்கான ரூபாய்களை அம்பலத்திற்கு கொண்டு வருவோம் என்றும் குறிப்பிட்டார்.

## 20 லட்சம் எயிட்ஸ் நோயாளர்?

(டில்லி)

இந்த தசாப்தத்தின் முடிவில் ஆசியாவில் இருபது இலட்சம் பேர் எயிட்ஸ் நோய்க்குப் பலியாவார்கள் என உலக சுகாதார நிறுவனத்தின் சர்வதேச எயிட்ஸ் திட்ட பணிப்பாளர் டாக்டர் மைக்கல் பேகம் தெரிவித்துள்ளார்.

## ஜெயலலிதா சொத்துகணக்கு காட்டத் தயாரா?

ரகுமான்கான் கேள்வி

(சென்னை)

சினிமாவில் நடித்ததன் மூலம் ஜெயலலிதா கோடி கோடியாகப் பணத்தை சம்பாதித்துக் கொண்டாரா? அப்படியானால் ஜெயலலிதாவின் சொத்துக் கணக்கைக் காட்ட அவர் தயாரா? என்று முன்னாள் அமைச்சரும், தி. மு. க. பேச்சாளருமான ரகுமான் கான் கேள்விஎழுப்பியுள்ளார்.

அ.இ.அ.தி.மு.க அரசின் அடக்கு முறை அராஜக ஆட்சியைக் கண்டித்து திருச்சியில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், 137 படங்களில் கதாநாயகியாக நடித்துக் கோடி கோடியாய் சொத்து சேர்த்துள்ளார் ஜெயலலிதா என்று நெடுஞ்செழியன் கூறுவது உண்மை என்றால் குடும்ப செலவிற்கு வழியில்லாமல் இருந்த ஜெயலலிதாவிற்கு கட்சியில் இருந்து மாதா மாதம் பணம் கொடுத்தேன் என்று முன்பு அறிக்கைவிட்டது ஏன்? என்றும் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் காங்கிரஸின்

## சக்தியை காட்டவேண்டிய காலம் நெருங்கிவிட்டது

– மூப்பனார்

(சென்னை)

"இனியும் அ.தி.மு.க.விற்கு அடிமையாக காங்கிரஸ் இருக்காது தனித்து நின்று தமிழகத்தின் காங்கிரஸ் ஆட்சி அமைப்போம் இனி காங்கிரஸின் பலத்தை காண்பிக்கும் காலமும் வந்துவிட்டது" என புதுக்கோட்டையில் காங்கிரஸ் கட்சியின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய மூப்பனார் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நமது பலத்தை சக்தியை காட்ட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இதுவரையும் தனித்து நிற்காமல் மற்றவர்களின் தோளில் ஏறிக்கொண்டோம் இப்போது நமக்கு தோளைக் காட்டிக் கொண்டு சிலர் நிற்கின்றனர் இனிமேல் நாம் யாருடைய தோளிலும் ஏறக்கூடாது என்றும் தெரிவித்தார்.

ஈழநாதம்

உ தைபந்தாட்டப் போட்டி 17வயதுபிரிவு

# புனிதசாள்ஸ் வித்தியாலயம் முதலாம் இடம் பெற்றது

நேற்றுமாலை சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ். மாவட்டப்பாடசாலைகள் உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன.

முதலாம் இடத்தைப்பெற்ற புனித சார்ள்ஸ் மகாவித்தியாலய அணி புனித ஹென்றியரசு கல்லூரியை 2 - 1 கோல்களால் தோற்கடித்தது.

3ஆம் இடத்தைப் பெற்ற கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாவைத் தோற்கடித்தது.

முதலாம் இடத்தைப்பெற்ற புனித சார்ள்ஸ் அணி தமிழீழ மேம்பாட்டுப் பேரவையால் அன்பளிக்கப்பட்ட கிளிநொச்சி மாணவர் அமைப்பாளர் 'இராஜேந்தர்' சுழற்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

இவ் வைபவத்திற்கு யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்டத்தளபதி திரு. வ. செல்வராசாவும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

## இன்று அரையிறுதிப் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவு அரை இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக அரங்கில் நடை பெறும்.

இப் போட்டியில்யாழ்.ஸ்கந்தவரோயாக் கல்லூரியை எதிர்த்து யாழ். புனித ஹென்றியரசர் கல்லூரியும் பி.ப. 3.00 மணிக்கு யாழ்.ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயமும் விளையாடும்.

# கர்நாடக முதலமைச்சர் பங்கராப்பா பதவி துறப்பு

(டில்லி)

கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார் இராஜினாமாவை ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.

மாற்றுஒழுங்குகள் செய்யும் வரை தொடர்ந்து பதவியிலிருக்கும்படி பங்காரப்பாவை ஆளுநர் கேட்டுள்ளார்.

கட்சியின் பார்வையாளர் குழு சமர்ப்பித்திருந்த அறிக்கையைப் பார்வையிட்டபிறகு பங்காரப்பாவைப் பதவி விலகும்படி பணிப்பதைத் தவிரக் கட்சித் தலைமைக்கு வேறு வழியில்லை என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பங்காரப்பா அவரது பதவிக் காலத்தில் பல ஊழல்கள் புரிந்ததாகக் குற்றம் சட்டப்பட்டிருந்தார்

முன்னதாக பிரதமர் நரசிம்மராவ் இவரைப் பதவி விலகுமாறு பணித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

பட்ட தாரிகளை

றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது என்பது தெரிந்ததே. ஆனால் யாழ். செயலகத்தில் தற்பொழுது இவ் விண்ணப்பப் படிவங்கள் இல்லை இதனால் மேற்படி பதிவு செய்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர் இதனை அடுத்தே யாழ். செயலகம் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. [பா]

## கூ.சங்கங்களில் பதவி வகிக்க தடை

(யாழ்ப்பாணம்)

கிராமசேவையாளர்களாக கடமையாற்றுபவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பதவிவகித்தல் தடைசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மேற்படி விடயம் குறித்து சம்மந்தப்பட்ட சகல அதிகாரிகளுக்கும் சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார். அதேவேளை கிராமசேவகர்கள் கூட்டுறவுச்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாவீரர்களே,

நெஞ்சினில் விடுதலைக் கனலைச் சுமந்தீர்
நெருப்பினில் ஆடியும் தேகம் இழந்தீர்
உங்கள் நினைவுடன் பயணம் தொடரும்
ஒருநாள் வெற்றிக் கொடிகள் உயரும்

(மாவீரர்நாள்-1992, சுவரொட்டிகள் பதாதை வசனங்கள்)

## கொண்ட கொள்கை வழுவாது நின்றிடுவோம்

கொடும்பனியில் உறைந்தாலும்
கடுந்தணலுள் கருகினாலும்
கொண்ட கொள்கை வழுவாது நின்றிடுவோம்
கொடிய பகை முடித்து வென்றிடுவோம் என்று
சொல்லாமல் சொல்லி
விடுதலைச் சுடராக ஒளி வீசுபவர்கள்
எம் மாவீரர்கள்.
புது விதியாய் எழுந்து
அடிமைத் தளை அறுக்க
பெரு நெருப்பாய் கனன்றவர்கள்.

# ஆரம்ப பாடசாலை ஆசிரியர் மேலும் 1000 பேர் நியமனம்

கல்விச் சேவைகள் சபை மேலும் 1000 ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ள இருக்கிறது. இந்த ஆசிரியர்களை நியமிப்பதற்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளின் முடிவுகள் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

சுமார் 1,45,000 பேர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றினர். ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

## காலமானார்

வவனியா முன்னாள் எம் பி த. சிவசிதம்பரம் கனடாவில் நேற்றுமுன்தினம்காலமானார்

66 வயது நிரம்பிய இவர் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினராக பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டார். 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தவிகூட்டணியின் பாராளுமன்றஉறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவராவர்.

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் நடராசா

நமசிவாயம் நடராசா (முன்னாள் யா. மா. ச. சந்தைக் குத்தகைக் காரர்) காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற நமசிவாயம், பொன்னுப்பிள்ளையின் அன்பு மகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், ஐயாத்துரை (ஜேர்மன்) யின் அன்புச் சகோதரனும், சிவபாதசுந்தரம் (கில்மன் - முன்னாள் யா. மா. ச. சந்தை மேற்பார்வையாளர்), புஸ்பராணி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சன், குகன், வேவி (ஜேர்மன்), புவனேஸ்வரி ஆகியோரின் பெரிய தகப்பனாரும், ரெட்ணா, செல்வரட்ணம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், துவாரகன், றமணராஜ் (ஜேர்மன்), பிரதீப் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேரனும், சுப்பிரமணியம், சண்முகம், கனகரட்ணம், கதிரவேற்பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் (12 - 11 - 92) இன்று முற்பகல் 11.00 மணியளவில் 20 A, ஈச்சமோட்டை கடற்கரை வீதியிலிருக்கும் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவபாதசுந்தரம் (கில்மன்)
20 A, ஈச்சமோட்டை
கடற்கரை வீதி.

[சி-5390]

## பொலிஸ் நிலையம் வாபஸ்

(ஏறாவூர்)

ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரிக கட்டடத்தில் முகாமிட்டு செயற்பட்டு வந்த சிறிலங்கா பொலிஸ் படையினர் அண்மையில் அங்கிருந்து வெளியேறி இருப்பதாக தெரிவருகிறது.

## டிமெல் சனிக்கிழமை வருகிறாராம்

[கொழும்பு]

முன்னாள் நிதியமைச்சர் ரொனிடிமெல்வரும் சனிக்கிழமை இலங்கை வரவுள்ளார் என அவரின்மனைவி மல்லிகா டிமெல் பத்திரிகையாளரிடம் பேசும் போது தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; திரு. அத்துலத்முதலியின் செயலினால் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் அக் கட்சியில் இருந்து விலகி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

வடக்கு

களப்பு, முல்லைத்தீவு ஆகிய ஆறு மாவட்டங்களில் 796 ஆலயங்கள்சேதமடைந்துள்ளதாகவும் இதனால் இவ் வணக்கஸ்தலங்களுக்கு 65 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 — 05 — 1968



வீரச்சாவு 12 — 11 — 1987

### வீரவேங்கை ராஜ்
(ஞானமுத்து ஞானசீலன்)

நற்குணத்தின் ஞானசீலா
அன்னியர்க்கு அடிபணியாது
இறுதிவரை போராடி
இன்னுயிரை தமிழ் மண்ணிற்காய்
அர்ப்பணித்து எம் நெஞ்சங்களில்
நிறைந்து விட்டாய்.

பிரபாகரன் வீதி,
கோண்டாவில்.
(3632)

அன்பு அம்மா,
சகோதரன், சகோதரி,
மைத்துனர்கள், மருமகள்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 11-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6620

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
24-6663, 40-1737, 24-5092, 28-3735, 27-9052, 27-3803, 4 -4760, 26-6842, 27-9756, 22-3611, 26-0649, 24-5774, 24-8558, 25-2467,

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;-
22-7406, 24-6280, 26-3146, 24-336, 27-8959, 27-1122 24-6431, 42-2355, 28-6640, 42-2595, 27-5845, 27-9626 26-5493, 26-8917, 22-2250, 24-0192, 26-6075, 41-9327, 27-922, 24-4303, 26-313)

## தமிழீழத்திற்காக விதைக்கப்பட்ட மைந்தர்களின்

[சி-5390]

கடற்கரை வீதி.

பட்டுள்ளதாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



ஈழ மண்ணிற்காக
26. 10. 1967

ஈழ விடுதலைக்காக
03. 11. 1990



திதி:- 12. 11. 1992

## கப்டன் அருந்ததி
## (சிவரஞ்சினி சண்முகநாதன்)

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

ஆண்டிரண்டு ஆனதுவோ அருந்ததியே
ஆசையுடன் ஈழமதைக் காணவென்று
மூண்ட பெரும் வேள்வியிலே ஆகுதியாய்
ஆனவளே அன்புசிவ ரஞ்சினியே
நீண்டதொரு பகைவரினும் அஞ்சாது
நீசர்களை ஓட்டிடவே வெஞ்சமரில்
ஈண்டிங்கு எழுந்திட்டார் இளைஞரெலாம்
ஈழமதைக் கண்டிடுவார் இஃதுறுதி

★

"மாண்புற்றாள் சிவரஞ்சனி அருந்ததியாக
மாவீராங்கனையாக எழுந்தே சென்றாள்"

சிவரஞ்சினி வீதி,
நாயன்மார்கட்டு.

த. சண்முகநாதன் குடும்பத்தினர்
கா. இரகுநாதன் குடும்பத்தினர்


[சி-5391]


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

தமிழீழத்திற்காக விதைக்கப்பட்ட மைந்தர்களின்

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

திதி: 12 - 11 - 1992







## வீரவேங்கை வேல்ராஜ்
[அறுக்காஞ்சி அமலதாஸ்]

வீரப்பிறப்பு: 5 - 6 - 1968
வீரச்சாவு: 6 - 7 - 1991

## சாந்தன்
(தேவதிரவியம் - அன்ரன் தவராசா)

வீரப்பிறப்பு: 04-02-1969
வீரச்சாவு: 12 - 11 - 1991

## லெப். அறிவழகன்
(தேவதிரவியம் - அல்பேட் புஸ்பராசா)

வீரப்பிறப்பு: 21 - 03 - 1971
வீரச்சாவு: 12 - 03 - 1991

எவ்விதம் அன்னவன் ஏற்றம் இயம்புவேன்
செவ்விய தமிழில் சிந்து பயின்றவன்
ஒவ்வொரு சொல்லையும் உருக்கிப்படைத்தவன்
கவ்வி இழுத்திடும் கொள்கை விளக்கத்தில் வல்லவன்
இருப்பேன் பல நாள் தமிழ்ஈழம் காண்பேன் என்றானே-எம்மை
ஏய்த்ததுபோல் இன்று சென்றானே - அவன்
சிரிக்கும் அழகைப் பார்ப்பதற்கோ - அந்த
தேவன் அருகினில் அழைத்தானோ.

எவ்விதம் அன்னவன் ஏற்றம் இயம்புவேன்
புறநானூற்றில் வீரகாவியம் பயின்றவன்
காசிஆனந்தனின் தேசிய உணர்வை அறிந்தவன்
இராவணனின் உயர்ந்த தோற்றமும் துணிந்த நடையும்
கொண்டவன்
அபிமன்யூவைப் போல் வியூகங்கள் அமைத்தவன்
இந்திரசித்துவைப் போல் பல களங்கள் கண்டவன்
தாயகத்தின் விடிவிற்காய் பெற்றோர் சகோதரன்
அன்பைத் துறந்தவன்
இக்குணங்களைக் காண்பதற்கோ - அந்த
தேவன் அருகினிலே அழைத்தானோ.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

பெற்றோர், சகோதரர், உறவினர்.

இடம்பெயர்ந்த பலாலி வளலாய்
கடற்றொழிலாளர் சங்கம்

சாந்தன் அறிவகம்
சாந்தன் பாலர் பாடசாலை
சாந்தன் விளையாட்டுக் கழகம்

பலாலி வடக்கு, வயாவிளான்.

(3628)